1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. என். வி.நடராசன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி நிதிநிலைமை சீரான உடனே, எந்த அளவிற்கு விரைவாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Dharmapuri district has been declared as a very economically backward district and it needs the sympathy of the Government. So, will the Government give first preference to it in the matter of establishing a Printing Press?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் நினைவில் கொண்டு, தருமபுரியில் அரசு அச்சகம் அமைக்கும் பிரச்சினை அக்கறையுடன் கவனிக்கப்படும். அதற்கு எந்த இடம் அளிக்க வேண்டுமோ, அந்த உரிய இடம் அளிக்கப்படும்.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு அச்சகம் தொடங்கப்படும் என்று கூறினார்கள். அது மதுரையில் துவக்கப் படுமா? அல்லது மதுரைக்குப் பக்கத்தில் அதையொட்டி ஏதாவது ஒரு கிராமத்தில் துவக்கப்படுமா? அதற்கான மூலதனம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிவிக்க முடியும்.

Water for Harijan Colonies in Tiruttani taluk

* 76 Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to provide pipe water supply to Harijan Colonies in Tiruttani taluk; and

(*b*) if so, the places where they are proposed?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

அரூர் வட்டம் அரிசன விடுதிகள்

* 77 வினா.—டாக்டர் ச. அ. சின்னராசு : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டத்திலுள்ள அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளுக்குப் புதியதாகக் கட்டடங்கள் கட்டவும், வசதிகள் பெருக்கவும் அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு : தலைவர் அவர்களே, புதிதாக அரிசன மாணவர்கள் விடுதிகளைத் திறக்கும்போது, அதற்கான வாடகைக் கட்டடங்கள் கிடைப்பதில்லை. கட்டடங்கள் தருவதற்குப் பலபேர் முன்வருவதே இல்லை. ஆகவே. அரசாங்கமே அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளுக்கான கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அரசாங்கமே விடுதிகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் முயற்சி இருக்கிறது. அரூரில் கட்டுவதற்கான செயற்குறிப்பு இப்போது இல்லை. அதைப்பற்றி பின்னல் கவனிக்கப்படும்.

திரு. வீ. செல்லதுரை : தலைவர் அவர்களே, ஓமலூரில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி இருந்தும் அங்கே மாணவிகள் தங்கிப் படிக்கக் கூடிய வசதியில்லை. எனவே, அங்கே அவர்களுக்கென்று ஒரு விடுதி கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போடவும்.

Ceiling on urban properties

* 78 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : **Will the** Hon. the Minister for Food and Revenue be pleased **to state—**

(*a*) whether the Special Committee on the urban **property** ceiling has submitted its **report; and**

(*b*) if so, the details **thereof?**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை அந்தந்த மாகாண அரசாங்கம் சீக்கிரமாக எடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் கருத்துத் தெரிவித்திருக்கிறது. அதன்படியாவது உடனடியாக அந்த அறிக்கையைத் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அறிக்கை தயாரிப்பதற்காகத்தான் குழுவை நியமித்திருக்கிறோம். அந்தக் குழு அறிக்கையை 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் சமர்ப்பித்து விடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேலை நடந்துகொண்டு இருக்கிறது.